CC 298/2018

16.05.2025.

அ.சா.1,

பெயர்: சுப்ரமணியம்

த/பெ. நாச்சிமுத்து

அ.சா.1 கு.ப.ம.எண்.4410/2024-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 1 Present. Accused 2 absent. Accused 1, 2 counsel present.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறிய படிதான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான், அதன்படி புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் எனது பக்கத்து தோட்டத்துக்காரர்கள் என்றால் சரிதான். எனக்கும் அ.சா.2 மற்றும் சிலருக்கும் வண்டிதடம் சம்பந்தமாகவும் சொத்து சம்பந்தமாகவும் பிரச்சனை இருக்கிறது என்றால் சரிதான்.

உங்கள் மீதும் அ.சா.2, சின்னத்தாய், ஜோதிமணி, ஜெயபிரகாஷ், ஜெயபிரியா, சாந்தாமணி, மஞ்சுபிரியா ஆகியோர் 1, 2 எதிரிகளை அடித்து காயம் ஏற்படுத்தியதற்காக நெகமம் காவல்நிலையத்தால் இதச பிரிவுகள் 294(பி), 147, 148, 506(2) மற்றும் 307 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கு சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி வழக்கில் நான், ஆறுச்சாமி, சின்னத்தாய், ஜெயபிரியா, சாந்தாமணி ஆகியோர் எதிரிகளாக உள்ளோம் என்றால் சரிதான், மேற்படி நாங்கள் இந்த வழக்கில் சாட்சிகளாக உள்ளோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் முதலில் முதல் தகவல் அறிக்கை என்மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பின்னிட்டு இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எதிரிகளின் மீதுள்ள முன்விரோதம் காரணமாக இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் சகோதரர் இறந்த பிறகுதான் வண்டித்தட பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, முன்னரே பிரச்சனை இருந்தது, இறந்தபிறகு பிரச்சனைஅதிகமாகிவிட்டது.

இறந்தவரின் சவத்தை எடுக்க விடாமல் குழி தோண்டி பிரச்சனை செய்தோம் என்றால் அவ்வாறு ஒரு பிரச்சனையே நாங்கள் செய்யவில்லை. வண்டித்தட பாதையில் நாங்கள் குழித்தோண்ட வில்லைஎன்றால் இந்த பிரச்சனை ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல, நாங்கள் குழிதோண்டவில்லை.

மேற்படி பிரச்சனையில் ரத்தினம் என்பவரை தாக்கி அவர் உயிர் போகும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 15 நாட்கள் தீவிர கிசிச்சை பிரிவில்

இருந்தார் என்றால் சரிதான், நானும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மேற்படி பிரச்சனை சம்பந்தமாக போலிசார் என்னை கைது செய்து, நீதிமன்ற பிணையில்வந்தேன் என்றால்சரிதான்.

இறந்த நபரின் வீட்டிற்கு யாரும் வரக்கூடாது என்பதற்காக நானும் என்னுடன் 8 பேரும் சேர்ந்து பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. இரும்பு கம்பிகளை பயன்படுத்தினோம் என்றால் இல்லை. இரும்பு கம்பியை போலிசார் எங்கிருந்து கைப்பற்றினார்கள் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் நடராஜும் இரத்தினசாமியும் இரும்பு கம்பியை கையில் வைத்திருந்தார்கள்.

புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சான்று பொருளை எங்கு வைத்திருந்தார்கள் என்று கூறவில்லையென்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக சான்று பொருள் வைத்திருந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் எங்கு வைத்து அடித்தார்கள் என்ற விவரத்தினை புகாரில் குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல.

நான் சொல்வது பொய் என்றாலும் எந்த சம்பவமும் நடைபெறவில்லையென்றாலும் சரியல்ல. நான் உண்மையைதான் கூறுகிறேன். புகாரினை நான் காவல்நிலையத்திற்கு சென்று போலிசார் சொல்ல சொல்ல எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதால் போலிசார் எனக்கு புகாரினை எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

புகாரினை நான் மருத்துவமனைக்கு சென்று மருத்துவம் பார்த்துவிட்டு வந்து காவல்நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் இல்லாமல் வெற்று தாள்களில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லையென்றாலும், நான் பின்யோசனை செய்து எதிரிகளின் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சான்று பொருள் என்னிடமிருந்து கொடுக்கப்பட்டது என்றாலும், எதிரிகள் கொண்டு வந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல, எதிரிகள்தான் கொண்டுவந்தார்கள். எதிரிகள் நிரபராதிகள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.

CC 298/2018

16.05.2025.

அ.சா.2,

பெயர்: ஆறுச்சாமி

த/பெ. பழனிச்சாமி

அ.சா.2 கு.ப.ம.எண்.4410/2024-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 1 Present. Accused 2 absent. Accused 1, 2 counsel present.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறிய படிதான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான், அதன்படி புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் எனது பக்கத்து தோட்டத்துக்காரர்கள் என்றால் சரிதான். எனக்கும் அ.சா.1 மற்றும் சிலருக்கும் வண்டிதடம் சம்பந்தமாகவும் சொத்து சம்பந்தமாகவும் பிரச்சனை இருக்கிறது என்றால் இல்லை.

வண்டித்தடம் சம்பந்தமாக உரிமையியல் வழக்கு பொள்ளாச்சி மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 116/2016 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நானும் ஒரு தரப்பினராவேன். நான் வண்டித்தட பிரச்சனை இல்லையென்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல, வண்டித்தட பிரச்சனை தனியாக உள்ளது.

உங்கள் மீதும் அ.சா.1, சின்னத்தாய், ஜோதிமணி, ஜெயபிரகாஷ், ஜெயபிரியா, சாந்தாமணி, மஞ்சுபிரியா ஆகியோர் 1, 2 எதிரிகளை அடித்து காயம் ஏற்படுத்தியதற்காக நெகமம் காவல்நிலையத்தால் இதச பிரிவுகள் 294(பி), 147, 148, 506(2) மற்றும் 307 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கு சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி வழக்கில் நானும், அ.சா.1 ம், சின்னத்தாய், ஜெயபிரியா, சாந்தாமணி ஆகியோர் எதிரிகளாக உள்ளோம் என்றால் சரிதான், மேற்படி நாங்கள் இந்த வழக்கில் சாட்சிகளாக உள்ளோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் முதலில் முதல் தகவல் அறிக்கை என்மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பின்னிட்டு இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எதிரிகளின் மீதுள்ள முன்விரோதம் காரணமாக இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் சகோதரர் இறந்த பிறகுதான் வண்டித்தட பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

இறந்தவரின் சவத்தை எடுக்க விடாமல் குழி தோண்டி பிரச்சனை செய்தோம் என்றால் அவ்வாறு ஒரு பிரச்சனையே நாங்கள் செய்யவில்லை. வண்டித்தட பாதையில்

நாங்கள் குழித்தோண்டவில்லை என்றால் இந்த பிரச்சனை ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல, நாங்கள் குழிதோண்டவில்லை.

மேற்படி பிரச்சனையில் ரத்தினம் என்பவரை தாக்கி அவர் உயிர் போகும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 15 நாட்கள் தீவிர கிசிச்சை பிரிவில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்களை அடித்தார்கள், நாங்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். எனக்கு எல்லா விவரமும் தெரிந்திருந்தும் தெரியாதென பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனை சம்பந்தமாக போலிசார் என்னை கைது செய்து, நீதிமன்ற பிணையில் வந்தேன் என்றால் சரிதான்.

இறந்த நபரின் வீட்டிற்கு யாரும் வரக்கூடாது என்பதற்காக நானும் என்னுடன் 8 பேரும் சேர்ந்து பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. இரும்பு கம்பிகளை பயன்படுத்தவில்லையென்றால் சரியல்ல. இரும்பு கம்பியை கொண்டுவந்து அடித்தார்கள்.

புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சான்று பொருளை எங்கு வைத்திருந்தார்கள் என்று கூறவில்லையென்றால் சரியல்ல, எங்களை அடிப்பதற்காக இரும்பு கம்பிகளை சம்பவயிடத்திலிருந்து எடுத்து வந்தார்கள். நான் வழக்கிற்காக சான்று பொருள் வைத்திருந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. புகாரினை நாங்கள் கூறினோம், போலிசார் எழுதினார்கள், அதில் நாங்கள் கையெழுத்து போட்டோம். இரும்பு கம்பியால் அடித்தது பொய் என்றாலும், போலிசார் தாக்கல் செய்துள்ள சான்று பொருள் வித்தியாசமாக உள்ளது என்றாலும் சரியல்ல, இரும்பு கம்பியால் எங்களை அடித்தது உண்மை.

நான் சொல்வது பொய் என்றாலும் எந்த சம்பவமும் நடைபெறவில்லையென்றாலும் சரியல்ல. நான் உண்மையைதான் கூறுகிறேன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லையென்றாலும், சான்று பொருள் என்னிடமிருந்து கொடுக்கப்பட்டது என்றாலும், எதிரிகள் கொண்டு வந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல, எதிரிகள்தான் கொண்டுவந்தார்கள். எதிரிகள் நிரபராதிகள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam BA.,BL.,)**
Judicial Magistrate No. II,
Pollachi.

CC 298/2018

16.05.2025.

அ.சா.3,

பெயர்: சின்னத்தாய்

க/பெ. ஆறுச்சாமி

அ.சா.3 கு.ப.ம.எண்.4410/2024-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 1 Present. Accused 2 absent. Accused 1, 2 counsel present.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறிய படிதான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான், அதன்படி புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi.